செய்தி இரண்டு

## மணவாட்டி கட்டப்படுதல்

வேத வாசிப்பு: ஆதி. 1:26; 2:7-10, 18-25; வெளி. 19:7-9; 21:9-11

**I. தேவனுடைய கட்டிடமே முழு வேதாகமத்திலும் உள்ள மைய காரியம்; கிறிஸ்துவின் மணவாட்டியே மூவொரு தேவனின் கட்டிடம்—"தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாகக் கட்டி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்"—ஆதி. 2:22 (எபி.):**

A. முழு வேதாகமமும் ஒரு கட்டுமான கையேட்டுக்கு ஒப்பிடப்படலாம்; பரிசுத்த வேதவாக்கியங்களிலுள்ள தெய்வீக வெளிப்பாட்டின் ஆரம்பமாக ஏதேன் தோட்டத்தைப் பற்றிய வெளிப்பாடும், பரிசுத்த வேதவாக்கியங்களிலுள்ள தெய்வீக வெளிப்பாட்டின் முடிவாகப் புதிய எருசலேமைப் பற்றிய வெளிப்பாடும் ஒன்றையொன்று பிரதிபலிக்கின்றன.

B. வேதவாக்கியங்களின் இந்த இரண்டு பகுதிகளிலும் என்ன வெளிப்படுத்தப்படுகிறதோ அதுவே, தேவனுடைய மைய எண்ணமும், தெய்வீக வெளிப்பாட்டின் மையக் கோடும், பரிசுத்த வேதவாக்கியங்களை வியாக்கியானிப்பதற்கும் புரிந்துகொள்வதற்குமான ஒரு கட்டுப்படுத்தும் கோட்பாடுமாகும்:

1. ஆதியாகமம் 1 மற்றும் 2, தேவன் தம் தெய்வீகக் கட்டிடத்தைப் பெறுவதற்கான அவருடைய ஜீவாதார கட்டுமான திட்டத்தின் வரைபடமாகும் (எபி. 11:10); தேவனுடைய வாஞ்சை, நம் முழு ஆள்தத்துவமும் கிறிஸ்துவைக் கொண்டு மறுபடி கட்டியமைக்கப்படுமாறு, நம் உள்ளார்ந்த கட்டமைப்புக்குள் கிறிஸ்துவைக் கட்டுவதாகும்; இவ்விதத்தில் தேவன் தம் சாயலில் தம்மை வெளிக்காட்டவும் தம் அதிகாரத்தைக் கொண்டு தம்மைப் பிரதிநிதிப்படுத்தவும் ஒரு கூட்டு மனிதனை ஆதாயப்படுத்தக்கூடும் (ஆதி. 1:26; 1 கொரி. 3:9; மத். 16:18; 2 சாமு. 7:12-14).
2. வெளிப்பாடு 21 மற்றும் 22, மூவொரு தேவனின் கூட்டு வெளியாக்கமாகிய, முடிவடைந்த கட்டிடத்தின் புகைப்படமாகும்; புதிய எருசலேமே ஏதேன் தோட்டத்தைப் பற்றிய தெய்வீக வெளிப்பாட்டின் பிரதிபலிப்பும் நிறைவேற்றமுமாகும்.
3. கிறிஸ்து, ஜெயங்கொள்பவர்களின் கூட்டுமொத்தமாக இருக்கப்போகும் தம் மணவாட்டியைத் திருமணஞ்செய்யும் மணவாளனாகத் திரும்பிவருவார்; இந்த யுகத்தில் ஜெயங்கொள்பவர்களால் செய்யப்பப்படும் இந்தக் கட்டியெழுப்புதல், இராஜ்ஜிய யுகத்தில் புதிய எருசலேமின் ஆரம்ப கட்ட முழுநிறைவேற்றத்திற்காகவும் (19:7-9), இறுதியில் புதிய வானம் மற்றும் புதிய பூமியில் புதிய எருசலேமின் பூரண முழுநிறைவேற்றத்திற்காகவும் இருக்கிறது (21:2).
4. நூற்றாண்டுகள்தோறும் பரிசுத்த ஆவி தொடர்ச்சியாக வேலைசெய்வதின்மூலம், இந்த இலக்கு இந்த யுகத்தின் முடிவில் எட்டப்படும்; அப்போது, ஜெயங்கொள்ளும் விசுவாசிகளான மணவாட்டி ஆயத்தமாயிருப்பாள், தேவனுடைய இராஜ்ஜியமும் வரும்—மத். 26:29; 13:43.
5. புதிய எருசலேமாகிய கூட்டு மணவாட்டி, தேவனுடைய குறிக்கோளின் இரண்டு அம்சங்களையும் பூர்த்திசெய்வாள் (ஆதி. 1:26); முதலாவது, புதிய எருசலேம் தேவனுடைய மகிமைக்காக அவருடைய முழு சாயலில் அவருடைய முழு வெளியாக்கமாக இருக்கும் (வெளி. 21:11; ஒப். 4:3); இரண்டாவது, இந்தப் புதிய எருசலேம் எதிரியைக் கீழ்ப்படுத்தி, பூமியைக் கைப்பற்றி, முழுப் பிரபஞ்சத்தின்மீதும் தேவனுடைய ஆட்சியுரிமையுடன்கூட அவருடைய அதிகாரத்தைப் பயிற்சிசெய்யும் (ஆதி. 1:26; வெளி. 22:5; ஒப். 20:10, 14-15).

C. தேவனுடைய மக்களாக நாம் தேவனுடனான ஒரு காதல் உறவுக்குள் நுழையும்போது, ஏவாள் ஆதாமின் ஜீவனைப் பெற்றுக்கொண்டது போலவே நாம் அவருடைய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம்; இந்த ஜீவனே தேவனுடன் ஒன்றாகும்படி நமக்குத் திறனளித்து, அவரை நம்முடன் ஒன்றாக்குகிறது—ஆதி. 2:21-22.

**II. தேவனும் அவருடைய மக்களும் ஒன்றாயிருக்க, அவர்களுக்கு இடையே ஒரு பரஸ்பர அன்பு இருந்தாக வேண்டும்; வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள, தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான அன்பு பிரதானமாக ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான பாசமான அன்பைப் போன்றது—யோவா. 14:21, 23; எரே. 2:2; 31:3:**

A. தேவனுடைய மக்கள் தேவனிடம் அன்புகூர்ந்து, அவருடைய வார்த்தையில் அவருடன் ஐக்கியங்கொள்ள நேரம் செலவிடும்போது, தேவன் தம் தெய்வீக மூலக்கூறை அவர்களுக்கு உட்செலுத்தி, தம் துணைவியாக அவர்களைத் தம்முடன் ஒன்றாக்குகிறார், ஜீவனிலும் சுபாவத்திலும் வெளியாக்கத்திலும் தம்மைப்போலாக்குகிறார்—சங். 119:140, 15-16.

B. தேவன் நம்மிடம் முதலில் அன்புகூர்ந்தார், ஏனெனில் அவர் தம் அன்பை நமக்குள் உட்செலுத்தி, நாம் அவரிடமும் சகோதரர்களிடமும் அன்புகூரக்கூடிய அந்த அன்பை நமக்குள் உண்டாக்கினார்—1 யோவா. 4:19-21.

C. தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஜீவன் ஓர் அன்பின் ஜீவன்; கிறிஸ்து அன்பாக இந்த உலகத்தில் தேவனுடைய வாழ்க்கை வாழ்ந்தார்; நாமும் இந்த உலகத்தில் அதே அன்பின் வாழ்க்கை வாழ்ந்து, அவர் இருக்கிற வண்ணமாகவே இருக்குமாறு, அவரே இப்போது நம் ஜீவனாக இருக்கிறார்—3:14; 5:1; 2:5-6; 4:17.

D. நம் இயற்கையான அன்பு சிலுவைமீது வைக்கப்பட்டாக வேண்டும்; நம் இயற்கையான அன்பு காயப்படுத்தப்படுவது மிகவும் எளிது என்பதே தேவனுடைய அன்புக்கும் நம் இயற்கையான அன்புக்கும் இடையே உள்ள ஒரு வேறுபாடு.

E. நாம் கிறிஸ்துவின் அன்பு எனும் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு அடித்துச்செல்லப்படுகிறவர்களாய் இருக்க வேண்டும்; தெய்வீக அன்பானது, நம் சுய-கட்டுப்பாட்டையும் மீறி நாம் அவருக்கு வாழும்படி நம்மை உந்தித்தள்ளுகிற, நம்மை நோக்கிப் பெருக்கெடுக்கும் பெருவெள்ளப் பிரவாகத்தைப் போன்று இருக்க வேண்டும்—2 கொரி. 5:14.

F. சகோதர அன்பைக் குறித்த கட்டளை பழையதும் புதியதுமாய் இருக்கிறது: விசுவாசிகள் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்தே அதைப் பெற்றிருப்பதால், அது பழையது; அவர்களுடைய கிறிஸ்தவ நடையில் அது புதிய ஒளியுடன் உதித்து, புதிய பிரகாசிப்பித்தலுடனும் பசுமையான வல்லமையுடனும் மீண்டும் மீண்டும் பிரகாசிப்பதால், அது புதியது—1 யோவா. 2:7-8; 3:11, 23; ஒப். யோவா. 13:34.

G. சரீரமானது, கிறிஸ்துவின் மணவாட்டியாகும்படி அன்பில் தன்னைத்தானே கட்டியெழுப்புகிறது (எபே. 4:16); தேவன் கொடுத்த, மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட நம் ஆவி ஓர் அன்பின் ஆவியாகும்; இன்றைய சபையின் சீரழிவை வெற்றிசிறக்க நமக்கு அனலாயிருக்கும் அன்பின் ஆவி தேவை (2 தீமோ. 1:7).

H. "அறிவு இறுமாப்புண்டாக்குகிறது, ஆனால் அன்பு கட்டியெழுப்புகிறது" (1 கொரி. 8: 1; ஒப். 2 கொரி. 3:6); ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்வது, நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதற்கான ஓர் அடையாளம் (யோவா. 13:34-35); சபையில் முதன்மையாயிருப்பதை அன்புகூர்வது, எல்லா சகோதரர்களையும் அன்புகூர்வதற்கு எதிரானது (3 யோவா. 9).

I. நாம் தெய்வீக ஜீவனைப் பெறும்படி கர்த்தராகிய இயேசு தம் ஆத்தும ஜீவனைக் கிடத்தியது போலவே, கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்துவதற்காகச் சரீர வாழ்க்கையை நடைமுறைபடுத்தும் காரியத்தில் நாம் சகோதரர்களை அன்புகூர்ந்து, அவர்களுக்கு ஜீவனை ஊழியஞ்செய்யும்படி, நம் ஆத்தும ஜீவனை இழக்கவும் சுயத்தை மறுதலிக்கவும் வேண்டும்—1 யோவா. 3:16; 4:17 மற்றும் அடிக்குறிப்பு 5; யோவா. 10:11, 17-18; 15:13; எபே. 4:29—5:2; 2 கொரி. 12:15; ரோ. 12:9-13.

J. கிறிஸ்துவின் ஜீவாதார சரீரமாக சபை கட்டியெழுப்பப்படுவதற்காக நாம் ஏதேனுமாக இருப்பதற்கும் ஏதேனும் செய்வதற்கும் அன்பே அதிமேன்மையான வழி—1 கொரி. 12:31—13:8:

**III. தமக்கென ஓர் இணைபாதியை உற்பத்திசெய்யும்படி, தேவன் என்ன செய்தார் என்பதை நாம் பார்க்க வேண்டும்; ஆதியாகமம் 2 ஆதாம், ஏவாள் ஆகிய மாதிரிகளில், கிறிஸ்து மற்றும் அவருடைய மணவாட்டியின் ஒரு சித்திரத்தை வெளிப்படுத்துகிறது:**

A. ஆதாம், தமக்கென ஒரு மனைவியைத் தேடிக்கொண்டிருக்கிற நிஜமான, பிரபஞ்சமளாவிய கணவராகிய, கிறிஸ்துவில் தேவனை மாதிரியாகக் காட்டுகிறான்—ரோ. 5:14; ஒப். யோவா. 3:29; 2 கொரி. 11:2; எபே. 5:31-32; வெளி. 19:7-9; 21:9-11.

B. "தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்"—ஆதி. 2:18:

1. ஆதாமுக்கு ஒரு மனைவி தேவை என்பது, தம் பொருளாட்சியில், தம் இணைபாதியாக, தம் முழுமையாக (எழுத்துப்படி, தம் இணையாக) ஒரு மனைவியைப் பெற வேண்டும் என்ற தேவனுடைய தேவையை மாதிரியாகக் காட்டுகிறது, சித்தரிக்கிறது; தேவன், அதாவது, கிறிஸ்து முற்றும்முடியவும் நித்தியமாகவும் பூரணராய் இருந்தாலும், தம் மனைவியாக சபை இல்லாமல் அவர் முழுமையாய் இல்லை.
2. கிறிஸ்துவை மாதிரியாகக் காட்டுகிற ஆதாம், சபையை மாதிரியாகக் காட்டுகிற ஏவாள் ஆகிய இருவரையும் தேவன் பெற வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்; அவருடைய குறிக்கோள், "அவர்கள்... ஆளக்கடவர்கள்" என்பதாகும் (1:26); இது, ஒரு வெற்றிகரமான கிறிஸ்து கூட்டல் ஒரு வெற்றிகரமான சபையைப் பெறுவதாகும், அதாவது, பிசாசின் வேலையை ஜெயங்கொண்டிருக்கும் கிறிஸ்து கூட்டல் பிசாசின் வேலையை முறியடித்திருக்கும் சபையைப் பெறுவதாகும்; கிறிஸ்துவும் சபையும் ஆட்சியுரிமையைப் பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (ரோ. 5:17; 16:20; எபே. 1:22-23).

C. தேவன் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் பூமியிலிருந்து உருவாக்கி, அவற்றை ஆதாமிடத்தில் கொண்டுவந்தார், "அப்படியே ஆதாம் சகலவித நாட்டுமிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை"—ஆதி. 2:19-20.

D. மனைவியானவள், ஜீவனிலும் சுபாவத்திலும் வெளியாக்கத்திலும் கணவன் இருக்கிற வண்ணமாகவே இருந்தாக வேண்டும்; கால்நடைகள், பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றின் மத்தியில் ஆதாம் தனக்கான ஒரு முழுமையை, தனக்குப் பொருந்தக்கூடிய ஒருத்தியைக் கண்டுபிடிக்கவில்லை—வ. 23.

E. தமக்கென ஒரு முழுமையை உற்பத்திசெய்யும்படி, தேவன் ஆதாமைச் சிருஷ்டித்ததின்மூலம் மாதிரியாகக் காட்டப்படுகிறபடி, தேவன் முதலில் ஒரு மனிதரானார்—யோவா. 1:14; ரோ. 5:14.

F. "தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்"—ஆதி. 2:21:

1. தன் மனைவியாக ஏவாளை உற்பத்திசெய்வதற்கான ஆதாமின் அயர்ந்த நித்திரை, தம் இணைபாதியாக சபையை உற்பத்திசெய்வதற்காகக் கிறிஸ்து சிலுவையில் மரித்த மரணத்தை மாதிரியாகக் காட்டுகிறது—எபே. 5:25-27.
2. வேதாகமத்தில் நித்திரை என்பதற்கு மரணம் என்று அர்த்தம்—1 கொரி. 15:18; 1 தெச. 4:13-16; யோவா. 11:11-14.
3. கிறிஸ்துவின் மரணம் ஜீவனை விடுவிக்கும், ஜீவனை உட்பகிரும், ஜீவனைப் பரப்பும், ஜீவனைப் பெருகப்பண்ணும், ஜீவனை மறுஉற்பத்திசெய்யும் மரணமாகும், இது, சபையாகிய சரீரமான அப்பத்தை உண்டாக்குவதற்காகப் (1 கொரி. 10:17) பல மணிகளை உற்பத்திசெய்யும்படி (12:24), கோதுமை மணி நிலத்திற்குள் விழுந்து மரிப்பதின்மூலமாகவும் வளர்வதின்மூலமாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது (1 கொரி. 10:17).
4. கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் அவருக்குள் இருந்த தெய்வீக ஜீவன் விடுவிக்கப்பட்டது, அவருடைய உயிர்த்தெழுதல்மூலம் அவருடைய விடுவிக்கப்பட்ட தெய்வீக ஜீவன் சபையைக் கட்டியமைப்பதற்காக அவருடைய விசுவாசிகளுக்குள் பகிரப்பட்டது—லூக். 12:49-50; ஒப். ரோ. 12:11; வெளி. 4:5.

5. இத்தகைய வழிமுறையின்மூலம், மனிதன் அவருடைய இணைபாதியாக அவருக்குப் பொருந்துமாறு ஜீவனிலும் சுபாவத்திலும் தேவன் இருக்கும்வண்ணமாகவே இருக்கத்தக்கதாக, கிறிஸ்துவில் தேவன் தம் ஜீவனோடும் சுபாவத்தோடும் மனிதனுக்குள் அடித்துருவாக்கப்பட்டிருக்கிறார்.

G. "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாகக் கட்டி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்"—ஆதி. 2:22 (எபி):

1. ஆதாமின் திறக்கப்பட்ட விலாவிலிருந்து எடுக்கப்பட்ட விலா எலும்பு, கிறிஸ்துவின் இணைபாதியாக சபையை உற்பத்திசெய்து கட்டியெழுப்புவதற்காக, அவருடைய விசுவாசிகளுக்கு ஜீவனை உட்பகிரும்படி, அவருடைய குத்தப்பட்ட விலாவிலிருந்து பாய்ந்தோடிய (யோவா. 19:34) அவருடைய முறிக்கப்பட முடியாத, அழிக்கப்பட முடியாத, நித்திய ஜீவனை மாதிரியாகக் காட்டுகிறது (எபி. 7:16; யோவா. 19:32-33, 36; யாத். 12:46; சங். 34:20):

a. கிறிஸ்துவின் விலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் வந்தன, ஆனால் ஆதாமின் விலாவிலிருந்து வெளிவந்தது இரத்தம் இல்லாத விலா எலும்பு மட்டுமே.

b. இதற்குக் காரணம், ஆதாமின் காலத்தில் இரத்தத்தின்மூலம் வரும் மீட்பிற்கு எந்தத் தேவையுமில்லை, ஏனெனில் அங்கே பாவம் இல்லை; கிறிஸ்து சிலுவையில் "நித்திரை செய்துகொண்டிருந்த" நேரத்திலே, பாவம் என்ற பிரச்சினை இருந்தது; இதனால், கிறிஸ்துவின் விலாவிலிருந்து வெளிவந்த இரத்தம் நம் சட்டரீதியான மீட்பிற்காக இருந்தது.

c. இரத்தத்தைத் தொடர்ந்து, தண்ணீர் வெளிவந்தது, இது நம் ஜீவாதார இரட்சிப்புக்காக தேவனுடைய பாய்ந்தோடும் ஜீவனாகும் (யாத். 17:6; 1 கொரி. 10:4; எண். 20:8); இந்தத் தெய்வீகமான, பாய்ந்தோடுகிற, சிருஷ்டிக்கப்படாத ஜீவன் ஆதாமின் விலாவிலிருந்து எடுக்கப்பட்ட விலா எலும்பினால் மாதிரியாகக் காட்டப்படுகிறது (ரோ. 5:10).

2. ஆதியாகமம் 2:22, ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டாள் என்று கூறாமல், அவள் கட்டப்பட்டாள் என்று கூறுகிறது; ஆதாமின் விலாவிலிருந்து எடுக்கப்பட்ட விலா எலும்பைக்கொண்டு ஏவாள் கட்டப்படுதல், சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் அவரிடமிருந்து விடுவிக்கப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலில் அவருடைய விசுவாசிகளுக்குள் பகிரப்பட்ட உயிர்த்தெழும் ஜீவனைக்கொண்டு சபை கட்டப்படுவதை மாதிரியாகக் காட்டுகிறது—யோவா. 12:24; 1 பேது. 1:3-4.

3. சபை நிஜமான ஏவாளாக, தம் விசுவாசிகள் எல்லாரிலும் உள்ள கிறிஸ்துவின் கூட்டுமொத்தமாகும்; சபை கிறிஸ்துவின் மறுஉற்பத்தியாகும்; கிறிஸ்துவின் மூலக்கூறைத் தவிர, சபையில் வேறெந்த மூலக்கூறும் இருக்கக்கூடாது—ஆதி. 5:2.

H. கிறிஸ்துவின் உயிர்த்தெழும் ஜீவனுடன் அவரிலிருந்து வெளிவருவது மட்டுமே அவருடைய மணவாட்டியாக அவருடைய முழுமையாக இருக்க முடியும் (1 கொரி. 12:12; எபே. 2:6; 5:28-30); சபை கிறிஸ்துவிலிருந்து வரும் ஒரு தூய்மையான உற்பத்தி; சபை "கிறிஸ்துமயமானது," "உயிர்த்தெழுதல்மயமானது," பரலோகமயமானது.

I. ஆதாமும் ஏவாளும் ஒன்றாக இருந்து, கணவனும் மனைவியுமாக ஒன்றுசேர்ந்து ஒரு திருமண வாழ்க்கை வாழ்ந்தார்கள் (ஆதி. 2:24-25); இது, புதிய எருசலேமில், பதனிடப்பட்டு முழுநிறைவடைந்த மூவொரு தேவன் பிரபஞ்சமளாவிய கணவனாக, மீட்கப்பட்டு, மறுபடிஜெநிப்பிக்கப்பட்டு, மறுசாயலாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்ட மனுஷீகமாகிய மனைவியுடன் என்றென்றும் ஒரு திருமண வாழ்க்கை வாழ்வார் என்பதைச் சித்தரிக்கிறது (வெளி. 22:17).

J. முடிவில்லாத நித்தியத்தில், தெய்வீகமான, நித்தியமான, விஞ்சும்விதத்தில் மகிமையான ஜீவனின்மூலம், அதிமேன்மையானதும், ஆசீர்வாதங்களாலும் மகிழ்ச்சியாலும் நிரம்பிவழிகிறதுமான ஒரு வாழ்க்கையாகிய, தேவனும் மனிதனும் ஒரே ஆவியாகக் கலந்திணைகிற ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ்வார்கள்.